முருகப்பெருமான் துணை

**மகான் அர்ஜுனன் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.04.2023**, சனிக்கிழமை

1. தவபலங்கள் தன்னை ஒன்றிணைத்து
தரும சக்தியாக வெளிப்படுத்த
அவதாரம் எடுத்த அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தகர் திங்கள்
குறைவிலா உபய திகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 2ம் நாள், 15.04.2023, சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அர்ஜுனன் யானும்
தேசிகனுக்கு அனுகூல ஆசியை
3. ஆசிதனை உலகநலம் பெறவும்
அரங்கன் சீடர்கள் பலம்பெறவும்
பேசிடுவேன் அருட்சுவடி வழி
பேதமிலா அரங்கன் சன்மார்க்கமே
4. சன்மார்க்கமே கலியிடரை வெல்லும்
சாற்றிடுவேன் உயர் மார்க்கமாம்
நன்மை கருதி அரங்கன் திருவடியை
நம்பிக்கை வைத்து சரணடைய
5. சரணடைய சகலருக்கும் மாற்றம்
சற்குருவாய் அரங்கன் அருளி
சரணாகதி தன்மைக்கு ஏற்ப
சகலதும் வெற்றி ஆகுமப்பா
6. அப்பனே கலிதன் இன்னலை
ஆக்கினையாக பெருக்கி நின்றாலும்
சுப்பனும் அரங்கன் அவதாரம் வழி
சுத்தி செய்து கொண்டே வருக
7. வருகின்ற காலம் தனில் சடுதி
வலுவிழந்து கலியிடர் முடிவுற்று
பெருமையும் பாதுகாப்பும் மிக்க
பேருலகாக கால மாற்றம் நிகழும்

8. நிகழவே நீதிமான்களாக படைகள்
நிலவுலகிள் அரங்கன் சீடர்களே
மகிழவே எங்கும் பெருகி நின்று
மகத்துவம்தனை படைக்க நேரும்

9. நேருமை கொண்ட வண்ணம்
நிலவுலகில் அனைத்துத் துறைகளுமே
வருமுலகில் மாற்றம் கண்டு
வளர்ச்சிப் பூமியாக மாறும்

10. மாறும் ஞானத் தலைமையாக
மகான்கள் அனைத்துப் பேரும்
ஆறுதலாய் வெளிப்பட்டு துணைவர
ஆற்றல்பட நல்லாட்சி ஞான ஆட்சியாக

11. ஆகவே உலகமாற்றம் தானும்
ஆற்றல் மிக்க அரங்கன் படைகளால்
செகம் எங்கும் சித்திகள் கிட்டும்
செப்பிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–